சிந்தனை
தொகுதி VII இதழ் I, II & III - 1995

# பிராந்திய ஒத்துழைப்பிற்கான தெற்காசியச் சங்கம் :- அமைப்பும் பிரச்சினைகளும்

தனபாலசிங்கம் கிருஷ்ண மோகன்

## 01 அறிமுகம்

உலகில் அரசியல், புவியியல் ரீதியாக வரையறுத்துக் கூறக்கூடிய ஒரு பிராந்தியமா தென்னாசியாவுள்ளது. மனித வளங்களையும், இயற்கை வளங்களையும் பெருமளவில் கொண்டுள்ள இப்பிராந்தியம் அபிவிருத்தியின்மை, வறுமை, கட்டுப்படுத்த முடியாத சனத்தொகை வளர்ச்சி போன்ற பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றது. இப்பிராந்திய மக்கள் பொதுவான வரலாறு, கலாசார, மொழி, இனஒற்றுமை போன்றவற்றினூடாக பொதுவான சமூகப் பெறுமானத்தினை கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர். இக்காரணிகள் தென்னாசியாவில் ஐக்கியத்தினை ஏற்படுத்த போதுமானவைகளாகும். இப்பிராந்தியத்தின் மைய அரசாக இந்தியா விளங்குகின்றது. பொதுவாக பிராந்தியக்கூட்டுக்கள் பாதுகாப்பினை நோக்கமாகக் கொண்டே உருவாக்கப்படுகின்றன. ஆனால் இதிலிருந்து விலகி உருவாக்கப்பட்ட அமைப்பாக சார்க் அமைப்பு காணப்படுகின்றது. இப்பிராந்தியத்திலுள்ள நாடுகள் தமது பொருளாதார கூட்டுறவினை வளர்க்கவும், சமாதானம், உறுதிப்பாடு, கலாசார அபிவிருத்தி, வாழ்க்கைத்தரம் என்பவற்றை பேணவும் ஒருமித்து செயற்பட முற்பட்டன. இதன் விளைவாகத் தோற்றம் பெற்றதே சார்க் அமைப்பாகும். இக்கட்டுரை இன்றிருக்கும் பிராந்திய சூழ்நிலையில் சார்க் அமைப்பு எதிர் நோக்கும் பிரச்சினைகளையும், மேலாதிக்கப் போக்கினை தக்க வைத்துக் கொள்ள இந்தியா எடுக்கும் தந்திரோ பாயச் செயற்பாடுகளையும் பரிசிலிக்கின்றது.

## 02 பின்னணியும், தோற்றமும்

மறைந்த வங்காளதேச ஜனாதிபதி ஷியாவுர் ரகுமான் 1997-1980 ஆண்டுகளில் அயல் நாடுகளாகிய இந்தியா, நேபாளம், பாக்கிஸ்தான், இலங்கை போன்ற நாடுகளுக்கு உத்தியோகபூர்வ விஜயங்களை மேற்கொண்டு தென்னாசியப் பிராந்தியக் கூட்டுறவிற்கான கருத்து நிலையினைத் தோற்றுவித்திருந்தார். அத்துடன் 1980ஆம்

ஆண்டு வைகாசி மாதம் 2ஆம் திகதி தென்னாசிய நாடுகள் மட்டத்தில் பிராந்திய கூட்டுறவிற்கான உச்சி மகா நாட்டினைக் கூட்டுதல் வேண்டும் என்ற கருத்தில் பூட்டான், இந்தியா, நேபாளம், மாலைதீவு, பாக்கிஸ்தான், இலங்கை போன்ற நாடுகளின் அரச தலைவர்களுக்கு உத்தியோக பூர்வமான ஒரு கடிதத்தினையும் எழுதியிருந்தார். ரகுமானின் இம்முயற்சியினை அடிப்படையாகக் கொண்டு, 1981ஆம் ஆண்டு சித்திரை மாதம் 21ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதிவரை தென்னாசிய நாடுகளின் வெளிவிவகாரச் செயலாளர்கள் ஏழு பேரும் கொழும்பில் சந்தித்து கூட்டுறவினை வளர்ப்பதற்கான முதனிலைத் துறைகளை தெரிவு செய்தனர். இவர்கள் விவசாயம், கிராமிய அபிவிருத்தி, தந்தித் தொடர்புகள், சுகாதாரமும் சனத்தொகையும், வானியல் ஆராய்ச்சி ஆகிய ஐந்து தறைகளை இதற்காக தேர்ந்தெடுத்துக் கொண்டனர். இதன் தொடர்ச்சியாக 1981ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 2ஆம் திகதி தொடக்கம் 4ஆம் திகதி வரை ஏழு நாடுகளின் வெளி விவகார அமைச்சுகளின் செயலாளர்கள் கத்மண்டுவில் கூடி, கூட்டுறவினை வளர்ப்பதற்காக போக்குவரத்து, தபால் சேவை, விஞ்ஞான தொழில் நுட்பம் ஆகிய மூன்று துறைகளையும் மேலும் இனம் கண்டு கொண்டனர். 1982ஆம் ஆண்டு ஆவணி மாதம் 7ஆம் திகதி தொடக்கம் 8ம் திகதி வரை வெளி விவகார அமைச்சர்களின் செயலாளர்கள் இஸ்லாமாபாத்தில் கூடி கூட்டுறவினை வளர்ப்பதற்காக விளையாட்டு, கலை, கலாசாரம் போன்ற விடயங்களையும் மேலதிகமாகச் சேர்த்துக் கொண்டார்கள். இவற்றை அடிப்படையாகக் கொண்டு முழுமையான செயற்பாட்டுத் திட்டங்களை வரைவதற்காக 1983ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10ஆம் திகதி தொடக்கம் 13ஆம் திகதிவரை கொழும்பில் ஏழு நாடுகளும் கூடியிருந்தன. 1983ஆம் ஆண்டு ஆவணி மாதம் 1ஆம், 2ஆம் திகதிகளில் புதுடில்லியில் ஏழு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களும் கூடி தென்னாசிய பிராந்திய கூட்டுறவிற்கான பிரகடனத்தை ஏற்றுக் கொண்டதன் மூலம் செயற்பாட்டுத் திட்டத்தினை ஆரம்பித்து வைத்தார்கள். இதனைத் தொடர்ந்து 1984ஆம் ஆண்டு ஆடி மாதம் 10ஆம், 11ஆம் திகதிகளில் மாலைதீவின் தலை நகரில் சார்க் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் ஒன்று கூடி, 1985ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் டாக்காவில் தென்னாசிய நாடுகளின் முதலாவது உச்சி மகா நாட்டினை கூட்டுவது எனத் தீர்மானித் தார்கள். முதலாவது உச்சி மகா நாட்டிற் கான ஆயத்த வேலைகளைச் செய்வதற்காக 1985ஆம் ஆண்டு மார்கழி மாதம் 5ஆம் திகதி டாக்காவில் கூடிய வெளிவிவகார அமைச்சர்கள் சார்க் அமைப்பின் சாசனத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டிய விடயங்களை முன் மொழிந்தனர். தொடர்ந்து 1985ஆம் ஆண்டு மார்கழி மாதம் 7ஆம் 8ஆம் திகதி களில் சார்க் அமைப்பின் முதலாவது உச்சி மகாநாடு டாக்காவில் கூட்டப்பட்டதுடன் தென்னாசியப் பிராந்திய கூட்டுறவு ஸ்தாபனம் முறையாக ஆரம்பிக்கப்பட்டு தன்னுடைய சாசனத்தையும் ஏற்றுக் கொண்டது.

## 03 சாசனத்திலுள்ள முக்கிய அம்சங்கள்

சார்க் அமைப்பின் சாசனத்தில் குறிப்பிடப்படும் முக்கிய அம்சங்களாகப் பின்வருவன காணப்படுகின்றன.

## I. கூட்டங்கள்

சாசனத்தின் உறுப்புரை III அரச தலைவர்களின் கூட்டங்கள் தொடர்பாக எடுத்துக் கூறுகின்றது. அமைப்பின் சாசனம் அரச தலைவர்களின் கூட்டங்கள் கூட்டப்படுவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தது. அரச தலைவர்களின் கூட்டங்கள் வருடத்திற்கு ஒரு தடவை அதற்கு மேலாக அங்கத்துவ நாடுகளின் தேவைகளைப் பொறுத்து கூடுவதற்கு இடமளிக்கப்படுகின்றது.

## II. அமைச்சரவை

உறுப்புரை IV அமைச்சரவை தொடர்பாக எடுத்துக் கூறுகின்றது. அங்கத்துவ நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களின் அமைப்பின் சபையாகக் கருதப்படும் இதுவே அமைப்பிற்கான முக்கிய தீர்மானங்களைத் தயாரிக்கும். இது இரு வருடங்களுக்கு ஒரு முறை கூடும். மேலதிக கூட்ட அமர்வுகளை நடத்த வேண்டுமாயின் அங்கத்துவ நாடுகளின் உடன்பாட்டின் பேரில் நடாத்திக் கொள்ளலாம். இதன் செயற்பாடுகளாக ஸ்தாபனத்தின் கொள்கைகளை உருவாக்குதல், முன்னேற்றத்தினை மீளாய்வு செய்தல், செயற்பாட்டிற்கான புதிய துறைகளைத் தீர்மானம் செய்தல், மேலதிக பொறிமுறைகளைத் தாபித்தல் என்பனவாகும்.

## III. நிலையான குழுக்கள்

உறுப்புரை V நிலையான குழுக்கள் தொடர்பாக எடுத்துக் கூறுகின்றது. அங்கத்துவ நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களின் செயலாளர்களைக் கொண்ட நிலையான குழு ஒன்று உருவாக்கப்படும். இவர்கள் தேவைகளுக்கு ஏற்ப கூடிக் கொள்வார்கள். ஆயினும் இவர்கள் நிச்சயமாக வருடத்திற்கு ஒரு முறை கூடியேயாக வேண்டும். தென்னாசிய பிராந்தியக் கூட்டுறவினைக் கண்காணித்தல், கூட்ட நிகழ்ச்சி நிரல்களையும், திட்டங்களையும் ஒருங்கமைத்தல், பிரதேச வெளி மூலவளங்களைத் திரட்டுதல் போன்றவைகள் அதன் முக்கிய கடமைகளாகும்.

## IV. அமைச்சரவை

தென்னாசிய பிராந்திய கூட்டுறவு ஸ்தாபனத்தின் உறுப்புரை I. II என்பன அதன் நோக்கங்களையும் கொள்கைகளையும் வரையறுத்துக் கூறுகின்றன.

### 01) நோக்கங்கள்

அ) தென்னாசிய மக்களின் நலனை மேம்படுத்தலும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தைச் சீர்படுத்தலும்

ஆ) பிரதேசத்தின் பொருளாதார வளர்ச்சி, சமூக முன்னேற்றம் கலாசார அபிவிருத்தி என்பவற்றைத் துரிதப் படுத்தல்

இ) தென்னாசிய நாடுகளுடைய கூட்டுத் தன்னம்பிக்கையினைப் பலப்படுத்தலும், மேம்படுத்தலும்

ஈ) பரஸ்பர நம்பிக்கை, புரிந்துணர்வு என்பவற்றை வழங்கலும், அங்கத்தவர்களுடைய பிரச்சினைகளில் அக்கறையாக இருத்தலும்

உ) பொருளாதார, சமூக, கலாசார, தொழில் நுட்ப அறிவியல் துறைகளில் பரஸ்பர உதவியையும், தீவிர இணைப்பையும் மேம்படுத்தல்,

ஊ) அபிவிருத்தி அடைந்த நாடுகளுடன் கூட்டாக கூட்டுறவைப் பேணுதல்

எ) பொது நலன் பேணப்பட வேண்டிய சர்வதேச விடயங்களில் அங்கத்துவ நாடுகளிடையே ஒற்றுமையினைப் பேணிக் கொள்ளல்

ஏ) ஒருமித்த இலக்குகள், நோக்கங்கள் கொண்ட சர்வதேச அமைப்புக்களுடன் ஒத்துழைப்பினை நல்குதல்

**02) கொள்கைகள்**

அ) பிராந்தியக் கூட்டுறவானது சம இறைமைக் கோட்பாட்டிற்கு மதிப்பளித்தல். பிரதேச ஒருமைப்பாடு, அரசியல் சுதந்திரம், ஏனைய அரசுகளின் உள்விவகாரங்களில் தலையிடாமை, பரஸ்பர நன்மை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

ஆ) இக்கூட்டுறவானது இருபக்க, பலபக்க கூட்டுறவுகளுக்குப் பிரதியீடாகாது, ஆனால் இவற்றிற்கு பூரண மதிப்பளிக்கும்.

இ) கூட்டுறவானது இரு தரப்பு சார்ந்த பலதரப்பு சார்ந்த சட்டப்படியான கடமைப்பாடுகளுக்கு முரணானதாக அமையமாட்டாது.

## V. தொழில் நுட்பக் குழுக்கள்

சாசனத்தின் உறுப்புரை IV தொழில் நுட்பக் குழுக்கள் தொடர்பாக எடுத்துக் கூறுகின்றது. அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட தொழில் நுட்பக் குழுக்கள் அமைக்கப்படும். இவைகள் அமுலாக்கம், இணைப்பு, ஒவ்வொரு துறைகளுக்குமான நிகழ்ச்சி நிரல்களைக் கண்காணித்தல் போன்றவற்றைக் கவனிக்கும்.

இவற்றை விட செயற்குழு, செயலாக்கம், பொது ஏற்பாடுகள், நிதி ஒழுங்குகள் என்பவைகள் தொடர்பாகவும் சாசனம் எடுத்துக் கூறுகின்றது.

சார்க் அமைப்பில் அங்கம் வகிக்கும் ஏழு நாடுகளும் அணிசேரா, ஐக்கிய நாடுகள் சாசனங்களில் கூறப்பட்டிருக்கும் தத்துவங்களில் குறிப்பாக "சம இறைமைத் தத்துவம், பிரதேச ஒருமைப்பாடு, தேசிய சுதந்திரம், படை பலத்தை உபயோகிக்காமை, ஏனைய அரசுகளின் உள்விவகாரங்களில் தலையிடாமை, எல்லாத் தகராறுகளையும் சமாதானமாகத் தீர்த்துக் கொள்ளல்" போன்ற விடயங்களை மிகவும் கடுமையாகப் பின்பற்ற வேண்டும் என ஒருமித்து ஏற்றுக் கொர்ண்டிருந்தன.

## 04 சார்க் அமைப்பும் அது எதிர் நோக்கும் பிரச்சினைகளும்

எல்லா சர்வதேச உறவுகளுக்குமான பொதுவான அடிப்படைத் தத்துவங்களாகிய சம இறைமைத் தத்துவம், பிரதேச ஒருமைப்பாடு, தேசிய சுதந்திரம், படை பலத்தை உபயோகிக்காமை, ஏனைய அரசுகளின் உள்விவகாரங்களில் தலையிடாமை, எல்லாத் தகராறுகளையும் சமாதானமாகத் தீர்த்துக் கொள்ளல் ஆகியன ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தாலும் சார்க் அமைப்பின் தத்துவங்களுள் இவைகள் சேர்த்துக் கொள்ளப்பட்டமை இவற்றின் முக்கியத்துவத்தினைச் சீர்குலைத்துள்ளது. ஏனெனில் சம இறைமைத் தத்துவம் என்பது சார்க் அமைப்பின் தத்துவங்களில் ஒன்றாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றமை தென்னாசியப் பிராந்திய அரசுகளுக்கிடையில் நடைமுறையில் சமத்துவமின்மை பாரியளவில்

உள்ளது என்பதை வெளிப்படுத்துவதாக உள்ளது. அதே நேரத்தில் படை பலத்தை உபயோகிக்காமை எல்லாத் தகராறுகளை யும் சமாதானமாகத் தீர்த்து வைத்தல் என்ற தத்துவங்கள் சார்க் அமைப்பின் தத்துவங்களாக ஏற்றுக் கொள்ளப் பட்டமை இந்திய-பாக்கிஸ்தானிய உறவு நிலைகளை மிகவும் உன்னிப்பாக கருத்தில் எடுத்து விசேடமாக சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தது.

1981 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் யுத்த தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றை இந்தியாவிடம் பாக்கிஸ்தான் முன் மொழிந்ததைத் தொடர்ந்து, இந்தியா சமாதான ஒப்பந்தம் ஒன்று தொடர்பாக பாக்கிஸ்தானிடம் முன் மொழிந்து கொண்டது. இவைகள் தொடர்பான பரஸ்பர பேச்சுவார்த்தை களுக்குள் இரு நாடுகளும் ஈடுபட்டிருந்தா லும் இரு தரப்பினரும் தென்னாசியப் பிராந்தியத்தில் இரு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட முனைப்படைந்திருக்க வில்லை. இரு தரப்பும் ஒருவர் மீது மற்றவர் பலதரப்பட்ட விடயங்களிலும் அச்ச உணர்வும், சந்தேகங்களும் கொண்ட வர்களாகவே காணப்படுகின்றனர்.

இந்நிலையில் சார்க் அமைப்பினைத் தோற்றுவிப்பதற்காக வங்காள தேசம் 1980ஆம், ஆண்டு நவம்பர் மாதத்தில் சமர்ப்பித்த வேலைத் திட்டத்தில் படை பலத்தை உபயோகிக்காமை, எல்லாத் தகராறுகளும் சமாதானமாகத் தீர்த்துக் கொள்ளப்படல் வேண்டும் என்ற தத்துவ ங்கள் இணைக்கப்பட்டிருந்தன. 1981ஆம் ஆண்டு தொடக்கம் 1983ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் தென்னாசி யாவிலுள்ள ஏழு நாடுகளின் வெளிவிவ கார அமைச்சர்கள் அல்லது அவர்களின் செயலாளர்கள் சந்திக்கின்ற போது, இந்திய பாக்கிஸ்தானிய உறவு நிலையினை முதன்மையாகக் கொண்டு படை பலத்தை உபயோகிக்காமை, எல்லாத் தகராறுகளும் சமாதானமாகத் தீர்த்துக் கொள்ளப்படல் வேண்டும் என்ற தத்துவங்கள் அமைப்பின் அடிப்படையாக ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும் என்பதில் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. ஆயினும் 1983ஆம் ஆண்டு டில்லியில் கூடிய வெளிவிவகார அமைச்சர்கள் மட்டத் திலான கூட்டம் வரையில் இவ்விடயம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. 1985ஆம் ஆண்டு மார்கழி மாதம் டாக்காவில் கூடிய அரச தலைவர்களது முதலாவது உச்சி மகாநாட்டில் இவ் இரு தத்துவங்களும் அமைப்பின் சாசனத்தில் முதலாவது பந்தியில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தமை எதிர்காலத்தில் தென்னாசியப் பிராந்தியத்தில் இந்திய-பாக்கிஸ்தானிய யுத்த சூழலைத் தவிர்ப்ப தற்கான ஒரு முன் முயற்சியேயாகும். இவ் இராஜதந்திரச் செயற்பாடு பிராந்திய கூட்டுறவின் ஏனைய இலக்குகளைச் சிறப்பாக அடைந்து கொள்ள உதவும் என எதிர்பார்க்கப்பட்டது.

சார்க் அமைப்பு தனது தீர்மானங் களை இலகுவாக மேற்கொள்வதற்காக சில முன்னேற்பாடான ஒழுங்குகளை வழிகாட்டும் தத்துவத்தில் ஏற்றுக் கொண் டது. அதில் குறிப்பாக எல்லா மட்டங்க ளிலும் தீர்மானங்கள் ஏகமனதான முறையில் எடுக்கப்படும். இரு பக்கத்திற் குரிய சிக்கலான விடயங்கள் வாதப் பிரதி வாதங்களில் இருந்து விலக்கப்படும் என்பவற்றைக் குறிப்பிட முடியும்.

எல்லாத் தீர்மானங்களும் ஏகமனதாக

எடுத்துக் கொள்ளப்படும் என்ற முன்னேற்பாட்டினை எல்லா அங்கத்துவ நாடுகளினதும் பிரதிநிதிகள் மிகவும் ஆர்வத்துடன் வரவேற்றிருந்தார்கள். அத்துடன் இது பெரிய நாடுகளால் சிறிய நாடுகளுக்கு ஏற்படக் கூடிய அபாயங்களிலிருந்து பாதுகாப்பு அளிப்பதாகவும் கருதப்பட்டது. விரும்பத்தகாத தீர்மானங்கள் அங்கத்துவ நாடுகள் மீது திணிக்கப்பட்டால் அங்கத்துவ நாடுகளின் நலன்கள் பாதிக்கப்படுவதுடன் அமைப்பின் ஐக்கியம் சிதைந்து விடும் என்பது கருத்தில் எடுக்கப்பட்டிருந்தது.

ஆனால் ஒரு பக்கத்திற்குரிய சிக்கலான விடயங்கள் வாதப் பிரதிவாதங்களில் இருந்து விடுபடும் என்பது மிகவும் தந்திரோபாயம் மிக்க இணைப்பேயாகும் தென்னாசிய நாடுகளை இவ்வாறான ஒரு பிராந்தியக் கூட்டுறவிற்குள் கொண்டு வர முயற்சி செய்யப்பட்ட காலம் தொடக்கம் இந்தியா இரு பக்கத்திற்குரிய சிக்கலான விடயங்கள் சார்க் அமைப்பில் வாதப் பிரதிவாதங்களுக்கு எடுத்துக் கொள்ளப் படக் கூடாது ஏ்னபதில் கவனம் செலுத்தி வந்தது. தென்னாசியப் பிராந்திய நாடுகளில் கூடியளவிற்கு இருபக்க விவகாரங்களிலும் ஈடுபட்டு வந்த நாடுகளில் இந்தியா முதன்மையான நாடாகும். இச்சூழ் நிலையில் சிக்கலான விடயங்களைச் சார்க் அமைப்பில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்வது தீர்வுகள் இல்லாத வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தி சார்க் அமைப்பையும் பிராந்திய சூழலையும் சீர் குலைத்து விடலாம் என எதிர்பார்க்கப் பட்டது. பிராந்தியத்தில் இரு பக்கச் சிக்கலான விடயங்களே முக்கியமான பிராந்திய இயல்பு என்ற கருத்து நிலை உறுதி பெறுவதற்கு இது வழி விடுவதாக இருந்தது. எவ்வாறாயினும் அமைப்பில் அங்கம் வகிக்கும் எல்லா அங்கத்துவ நாடுகளின் மனப்பூர்வமான விருப்பத்திற்கு மாறாக இந்தியாவின் அழுத்தத்திற்கு இடம் கொடுத்து இம் முன்னேற்பாட்டை ஏற்றுக் கொள்ள வேண்டிய தேவை சார்க் அமைப்பிற்கு ஏற்பட்டிருந்தது. இதில் இந்தியா அடைந்த வெற்றியானது சார்க் அமைப்பின் தத்துவங்களில் ஒன்றாகிய "ஒரு அரசின் உள் விவகாரங்களில் தலையிடாமை" என்ற தத்துவத்தை இலகுவாக உடைத்தது. தனது தேசிய நலன் ஒன்றைக் கருத்தில் கொண்டு பிராந்திய அரசுகளின் உள் விவகாரங்களில் தலையிட வழி தேடிக் கொடுத்திருந்தது. எனவே இம் முன்னேற்பாட்டைப் பயன்படுத்தி இந்தியா தனது நலன் தொடர்பான நீண்டகாலக் கண்ணோட்டத்தில் அங்கத்துவ நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடுவதும் இலகுவாக்கப் பட்டிருந்தது.

இருதரப்பு சிக்கலான விடயங்கள் சார்க் அமைப்பில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படல் வேண்டும் என வெவ்வேறுபட்ட நாடுகளால் அழுத்தம் கொடுக்கப்பட்டது. இரு தரப்பு விவகாரங்கள் தொடர்பாக தொடர்புடைய நாடுகளது வெளிவிவகார அமைச்சர்களாலும், அரச தலைவர்களாலும் விடுக்கப பட்ட உத்தியோகபூர்வ அறிக்கைகளும், பேச்சுக்களும் இதனை வலியுறுத்தின. சில சந்தர்ப்பங்களில் சில நாடுகளின் பிரதிநிதிகள் குழு விசேடமாக இரு தரப்பு விவகாரங்கள் தொடர்பாக தங்களுடைய நிலையினை தெளிவுபடுத்த சார்க் கூட்டத்தொடர் காலத்தில் பிரசுரங்களைக் கூட விநியோகித்திருந்தார்கள். உதாரணமாக, இலங்கையின் இனப்பிரச்சினைகளு



UNIVERSITY OF JAFFNA
LIBRARY
PERIODICAL DIVISION

டன் இந்தியாவிற்குள்ள தொடர்பினால் தனக்கு ஏற்பட்டுவரும் கஸ்டங்களை சார்க் அமைப்பு கூட்டத் தொடர் காலத்தில் இலங்கை நேரடியாகவே எடுத்துக் கூற முயற்சித்தது. பின்னர் 1987ஆம் ஆண்டு ஆனி மாதம் இலங்கையின் வடபுலத்தின் ஆகாயப்பரப்பை இந்திய விமானங்கள் முற்றுகையிட்டு ஒரு தலைப்பட்சமாக நிவாரண உணவு விநியோகத்தினை பொதிகளாக வானத்தில் இருந்து போட்டது. இதனால் மனவேதனையும் கோபமும் அடைந்த இலங்கை இச்செயற்பாட்டை எதிர்க்கும் படி சார்க் அமைப்பிடம் கோரிக்கை விடுத்தது. சார்க் அமைப்பின் சாசனத்தில் கூறப்பட்டிருக்கும் விதிகளுக்கு மாறாக ஒரு கலந்துரையாடலை நடாத்தும்படி இலங்கை வெளியுறவு அமைச்சர் கோரிக்கை விடுத்தார். இலங்கையின் இக்கோரிக்கைக்கு பாக்கிஸ்தானிடமிருந்து ஆதரவு கிடைத்திருந்தது. இரு தரப்பு அரசியல் விவகாரங்கள் சார்க் அமைப்பில் விவாதிக்கப்பட வேண்டும் என்பதில் பாக்கிஸ்தான் மிகவும் ஆர்வம் காட்டி வந்த நாடாகும். இதனால் பாக்கிஸ்தான் இருதரப்பு விவகாரங்களையும் சார்க் அமைப்பில் பரிசீலிக்க வேண்டும் என்பதை ஆதரித்திருந்தமையில் ஆச்சரியமில்லை. ஆயினும் இந்தியா சார்க் கூட்டத் தொடரில் இருதரப்பிற்குரிய சிக்கலான விடயங்களை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதில்லை என்ற ஏற்பாட்டிலிருந்து விலகிக் கொள்ள தயாராகவிருக்கவில்லை. இலங்கையின் இன முரண்பாடு தொடர்பாக இரு தரப்பிற்குமுள்ள பிரச்சினைகளை சார்க் அமைப்பிலுள்ள அனேக தலைவர்கள் விவாதிக்க முயற்சித்தாலும் இந்தியா அதனை இறுதிவரை எதிர்த்தே வந்தது.

அதே நேரத்தில் சார்க் கூட்டத் தொடருக்கான நிகழ்ச்சி நிரல்கள் தயாரிக்கப்படும் போது பஞ்சாப் மாநில சீக்கிய தீவிரவாதிகளுக்கு பாக்கிஸ்தான் உதவி செய்கின்றமை, இலங்கை, வங்காள தேசம் போன்ற நாடுகளிலிருந்தும் வரும் அகதிகளால் எதிர் நோக்கப்படும் பிரச்சினைகள் போன்ற விடயங்களை இந்தியா சேர்த்திருந்தது. அங்கத்துவ நாடுகளின் விருப்பத்தினை இந்தியா எதிர்பாராது கூட்ட நிகழ்ச்சி நிரல்களில் இவைகளைச் சேர்த்திருந்தது. தனக்குச் சாதனமான சூழலில் தனக்கு சாதகமான விடயங்களை சார்க் கூட்டத் தொடரின் நிகழ்ச்சி நிரல்களில் இணைத்து விடும் முன்னுக்குப் பின் முரணான செயற்பாட்டின் மூலம் இந்தியா தனது ஆதிக்கத்தை சார்க் அமைப்பினுள் நிலை நிறுத்த முற்படுகின்றது. இது தென்னாசியப் பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்ள இந்தியா முயற்சிப்பதையே சுட்டிக் காட்டுகின்றது.

## 05 பாதுகாப்புத் தந்திரோபாயமும் இந்தியாவும்

தென்னாசியப் பிராந்தியத்தில் பகைமை உணர்வுகளுக்கிடையில் பொது இணக்கம் காணும் பண்பு வளர்ந்திருக்கின்றது. இப்பண்பு 1950 களில் இருந்தே விருத்தியடைந்து வந்துள்ளது. பெருமளவிற்கு இந்தியா, பாக்கிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் இப்பொது இணக்கத்தினை ஏற்படுத்த முயற்சிசெய்து வருகின்றன. மறுபக்கத்தில் இந்தியாவும் பாக்கிஸ்தானும் ஒருவருக்கொருவர் பெரும் அச்சுறுத்தல்களை விடுக்கும் நாடுகளாக வளர்ந்து வருகின்றன. இந்நிலையானது

தென்னாசியாவின் ஏனைய நாடுகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது. தென்னாசிய நாடுகள் இந்தியாவிற்கும், பாக்கிஸ்தானுக்குமிடையில் அதிகரித்து வரும் அதிகாரப் போராட்டத்திலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்வதற்காக இவ்விரு நாடுகளுடனோ அல்லது சார்க் அமைப்பு ஊடாகவோ எவ்வித பாதுகாப்பு உடன்படிக்கையினையும் செய்திருக்கவில்லை. அதேநேரம் காலத்திற்கு காலம் பல்வேறு சந்தர்ப்பங்களில் வங்காளதேசம், நேபாளம், இலங்கை என்பன தமது உள்விவகாரங்களில் இந்தியாவின் தலையீட்டினை உள்வாங்கியும் வருகின்றன. இவ்வாறான சூழ்நிலை பிராந்தியத்திற்குள் வளர்ந்து வருகின்ற சார்க் அமைப்பில் சமனிலையின்மையினை தோற்றுவிப்பதாகவுள்ளது. இதனால் இந்தியாவின் அரசியல் இராணுவ வல்லாதிக்கம் பிராந்தியத்திற்குள் வளர்வதை தடுக்கமுடியாதுள்ளது.

தென்னாசியப்பிராந்தியத்திற்குள் இந்தியாவின் வல்லாதிக்கம் வளர்வதற்கு பிராந்தியத்திலுள்ள நாடுகளின் புவிசார் அமைப்பு இந்தியாவிற்கு சாதகமாகவுள்ளது. இந்தியாவின் பாதுகாப்பினை தென்னாசியாவில் பாதுகாப்பு வலைப்பின்னல் ஒன்றை உருவாக்குவதன் மூலம் உறுதிப்படுத்த முடியும் என்பதில் இந்தியா நம்பிக்கை கொண்டுள்ளது. பாதுகாப்பு வலைப்பின்னல் என்பதற்குள் குறிப்பிட்ட அரசுகள் ஒன்றிணைந்து ஒவ்வொருவரும் எல்லோரது பாதுகாப்பிற்காக மிக நெருக்கமாக ஒத்துழைத்தல் என்ற நிலை காணப்படும். தென்னாசியப் பிராந்தியத்தின் பாதுகாப்பு வலைப்பின்னலின் இதயமாக இந்தியாவும், பாக்கிஸ்தானும் காணப்படுகின்றன. இவ்விருநாடுகளும் தமது பாதுகாப்பினை உத்தரவாதப்படுத்த பாதுகாப்பு வலைப்பின்னலையே நம்பியிருக்கின்றன. இப்பிராந்தியத்தில் காணப்படும் வலுக்குறைந்த நாடுகளாகிய வங்காளதேசம், இலங்கை, நேபாளம், பூட்டான், மாலைதீவுகள் ஆகியன புவிசார் மையம் காரணமாக இப்பாதுகாப்பு வலைப்பின்னலுக்குள் கட்டுப்பட்டுக் கிடக்கின்றன. ஏறக்குறைய இவ் அரசுகள் எல்லாம் தமது சர்வதேச பாதுகாப்பிற்கு இந்தியாவினை நம்பியிருக்கின்ற நிலையே காணப்படுகிறது. இந்நாடுகள் தமது வெளிநாட்டுக் கொள்கைகளை "நடுநிலையாக" அல்லது "இந்தியாவிற்கு சார்பாக" எப்போதும் உருவாக்க வேண்டியுள்ளது. இதனால் இந்நாடுகள் தமது உள்நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இந்தியாவினை எதிர்பார்த்திருக்க வேண்டிய தேவை உருவாகியுள்ளது. உள்நாட்டில் ஏற்படும் புரட்சிகள் பிராந்திய அரசுகளுடன் தொடர்புபடுத்தப்படுகின்றன. இயல்பாகவே இது பிராந்தியத்தில் பதட்டத்தினை ஏற்படுத்தி விடுகின்றது. இந்தியா தனது வல்லாதிக்கப் போக்கிற்காக எடுக்கும் இந்நிலைப்பாடுகள் இறுதியில் சார்க் அமைப்பின் நோக்கங்களையும் கொள்கைகளையும் கேள்விக்குரியதாக்கி விடுகின்றது.

## முடிவுரை

"பாதுகாப்பு வலைப்பின்னல்" என்பதை சார்க் அமைப்பின் கொள்கைகளாகிய உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமை பிரதேச ஒருமைப்பாடு என்பவற்றுடன் தொடர்புபடுத்தும் போது இக் கொள்கை நடைமுறை சாத்தியமற்றதொன்றாகி விடுகின்றது. இந்தியா, பிராந்தியத்தின் தலைமைத்துவத்தினை தனதாக்கிக்



UNIVERSITY OF JAFFNA LIBRARY PERIODICAL DIVISION

கொள்வதற்காக எடுக்கும் முயற்சிகள் சார்க்கின் கொள்கைகள் நோக்கங்களை அர்த்தமற்றதாக்கி விடுகின்றது. இந்தியா பிராந்திய அதிகாரத்தினை தனதாக்கிக் கொள்ள முயலுவதும், பாக்கிஸ்தான் இந்தியாவுடன் அதிகாரப் பேரம் பேசுதலில் ஈடுபடுவதும் ஏனைய நாடுகள் இவ் அதிகாரமையத்தினைச் சுற்றி இயங்குகின்ற நிலைமையுமே காணப்படுகின்றது. இந்தியாவுடன் நேபாளம், பூட்டான், வங்காளதேசம், இலங்கை, மாலைதீவுகள் கொண்டுள்ள நெருக்கமான புவிசார் தொடர்பும் இந்தியாவின் நிலப்பரப்பு, சனத்தொகை, இராணுவபலம், பொருளாதாரம் என்பனவும் தென்னாசியாவில் இந்தியாவினை ஒருமைய அரசாக மாற்றியுள்ளது. சந்தேகமின்றி தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தியா பெரிய நாடாகும். எனவே இந்நாடு இப்பிராந்தியத்தின் கூட்டுறவினையும, சமாதானத்தினையும், உறுதிப்பாட்டினையும் உருவாக்குவதில் விசேட பொறுப்பேற்று செயற்பட வேண்டிய நாடாகும். ஆனால் கடந்த காலத்திலிருந்து இந்தியாவின் செயற்பாடுகள் தவறான புரிந்துணர்வுகளையும், பகைமைகளையும் வளர்ப்பதாகவே அமைந்துள்ளது. இந்தியா தனது தேசிய நலனில் செலுத்தும் அக்கறை பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளின் தேசிய நலனில் பாதிப்பினை ஏற்படுத்துவதாக உள்ளது. பிராந்தியத்தில் இந்தியா தன்னை வல்லாதிக்க சக்தியாக உயர்த்த முற்படுகின்றது. இது பிராந்தியத்தின் சமாதானம், உறுதிப்பாடு, சமாதான சகவாழ்வு என்பவற்றை சீர் குலைத்து விடுகின்றது. இந்தியாவின் நோக்கில் பிராந்திய நலன் என்பது இந்தியாவின் நலனாகவே நோக்கப்படுகின்றது. இந்தியாவினை விடுத்து ஏனைய நாடுகள் தமது சமூக, பொருளாதார, கலாசார, அரசியல் அம்சங்களை வளர்ப்பது இந்தியாவிற்கான சவாலாகவே நோக்கப்படுகின்றது. இந்நிலையில் சார்க் ஸ்தாபனம் எதிர் காலத்தில் இந்தியாவின் ஆதிக்கப்பிடியில் இருந்து இப்பிராந்தியத்தினை பாதுகாப்பது எதிர்பார்க்க முடியாத ஒன்றாகவே உள்ளது.

## உசாத்துணை


01. Rama S. Melkote (Ed); **Indian Ocean Issues for Peace**, Manohar, 1995.

02. Verinder Grover (Ed); **International Relations and Foreign Policy of India**, Deep & Deep Publicatioin, New Delhi, 1992

03. Bertram Bastiampillai (Ed); **India and her south Asian Neighbours**, Colombo, 1992

04. Bimal Prasad (Ed), **Regional Cooperation in South Asia**, Vikas Publishing house Pvt Ltd. 1989.

05. Mervyn de Silva (Ed); **Lanka Guardian**, Vol, 19. No. 1 & 2, 1996, Colombo

06. Charter of South Asian Association of Regional Cooperation

07. SAARC Summit of Dhaka and Bengalure, 1985

08. Sudhakar. E; **SAARC: Origin, Growth and Future**, Gyan publishing House, New Delhi, 1994

09. Debendra K. Das (Ed); **SAARC: Regional Co-operation and Development**, Perspective problems, policies, Deep & Deep publications, New Delhi, 1993.